ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශේෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2231/17 - 2021 ජූනි මස 11 වැනි සිකුරාදා - 2021.06.11
*2231/17 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்*

*1985 ஆம் ஆண்டின் 48 ஆவது மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆவது இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) சட்டத்தின் உப பிரிவு 4 (1) மற்றும் பிரிவு 14 ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், பின்வரும் ஒழுங்குவிதிகளை அறிவிக்கிறேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, யூன் 11.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் "2021 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்" என எடுத்துக்காட்டப்பட முடியும்.

2. இந்த ஒழுங்குவிதிகள் 2021, யூன் 11 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறுதல் வேண்டும்.

3. இலங்கை தேசிய மருந்துப்பொருட்கள் ஒழுங்குபடுத்துகை அதிகார சபையின் பரிந்துரை இல்லாமல் எந்தவொரு ஏற்றுமதியாளரும் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடாது.

4. இந்த ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவது தொடர்பாக எழும் ஏதேனும் பிரச்சினைகள் குறித்த இறுதித் தீர்மானம், தேசிய பொருளாதாரம், பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் நலனைக் கருத்திற் கொண்டு இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

1A - PG 5467 — 495 (2021/06)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

| | நிரல் I<br>எச் எஸ்<br>தலைப்பு | நிரல் II<br>எச் எஸ்<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் |
|---|---|---|---|---|
| 1 | 28.04 | | | ஹைட்ரஜன், அரிய வாயுக்கள் மற்றும் பிற உலோகமல்லாதவை |
| | | 2804.40.00 | - | ஒக்ஸிஜன் |
| | | | | |
| 2 | 90.19 | | | மெக்கானோ-தெரபி உபகரணங்கள் ; மசாஜ் கருவி; உளவியல் திறன் சோதனை இயந்திரம்; ஓசோன் சிகிச்சை; ஒக்ஸிசன் சிகிச்சை; ஏரோசல் சிகிச்சை; செயற்கை சுவாசம் அல்லது பிற சிகிச்சை சுவாசக் கருவி. |
| | | 9019.20.00 | - | ஓசோன் சிகிச்சை; ஒக்ஸிசன் சிகிச்சை; ஏரோசல் சிகிச்சை; செயற்கை சுவாசம் அல்லது பிற சிகிச்சை சுவாசக் கருவி. |

06-365

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.